


ஷோகோ சாமியார் (முன்பே சொல்ல மறந்துவிட்ட ஓர் இடைச்செருகல். இவருக்கு ஒரு மாமியாரும் ஆறு வாரிசுகளும் உண்டு. டோக்கியோவில் ஒரு அபார்ட்மெண்டில் ஒண்டுக்குடித்தனம் இருந்தாரே, அப்போது பக்தையாக வந்த ஒரு கல்லூரி மாணவியை டாவடித்து காந்தர்வ மணம் புரிந்துகொண்டுவிட்டார். ஆனால், அவரது தனி வாழ்க்கை குறித்து அதிக தகவல்கள் இல்லை.) அரசியலில் குதிக்கலாம் என்று நினைத்ததற்கு மேலும் சில காரணங்களைச் சொல்லலாம்.

1989-ம் ஆண்டு அந்த வழக்கறிஞர் படுகொலைச் சம்பவத்துக்குச் சற்று முன்னும் பின்னுமாக ஓம் ஷின்ரிக்கியோ இயக்கத்தின் பெயர் கடுமையாக ரிப்பேர் ஆகத் தொடங்கியிருந்தது. அனைத்துமே ஷோகோ எதிர்பாராத சம்பவங்கள். ஆசிரமத்தில் எத்தனைக்கு எத்தனை தீவிரமாக பக்தர்கள் வந்து குவியத் தொடங்கினார்களோ, அத்தனைக்கு அத்தனை வேகமாகச் சிலர் வெளியேறவும் தொடங்கினார்கள்.

அப்படி வெளியேற முனைந்தவர்களில் பலர் சாமியாரின் பெயரை ரிப்பேர் ஆக்கும் விதத்தில், வெளியே போய் பேசத் தொடங்கினார்கள். 'ஆசிரமத்தில் ஒன்றும் சரியில்லை. இளைஞர்கள் மற்றும் இளம் கன்னியரை வசியப்படுத்தி, உள்ளே சேர்த்து, கெட்ட காரியங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். நிறைய விஷயம், நடப்பதெல்லாம் மர்மமாக இருக்கிறது. பலபேர் திடீர் திடீரென்று காணாமல் போகிறார்கள். காணாமல் போய் கிடைக்கிறவர்களெல்லாம் அநேகமாக இறந்த உடலாகத்தான் அகப்படுகிறார்கள். சொல்லி வைத்த மாதிரி எல்லாரும் ஆக்சிடெண்டில் இறக்கிறார்கள். என்னவோ நடக்கிறது. ஒன்றும் புரியவில்லை. தவிரவும், வண்டி வண்டியாகக் குவியும் பணத்துக்குக் கணக்கு வழக்கே இல்லை. பக்தி மார்க்கத்தைப் பரப்பும் இயக்கத்தின் மேல் மட்டத்தில் பல குண்டர்கள் அடிக்கடி வந்து போகிறார்கள். யாரைப் பார்த்தாலும் பி.எஸ். வீரப்பா போலவே தெரிகிறார்கள். மகான் ஷோகோ இந்த வீரப்பாக்களிடம் மிகுந்த அன்னியோன்னியமாக நடந்து கொள்கிறார். அடிக்கடி ரகசிய அறையில் அவர்கள் கதவைப் பூட்டிக் கொண்டு மணிக்கணக்கில் தியானம் பண்ணுவது சந்தேகத்துக்கு இடமாக இருக்கிறது.'

இன்னோரன்ன குற்றச்சாட்டுகள். இதெல்லாம் இமேஜை டேமேஜ் பண்ணாதா என்ன?

ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகள் எதிலும் உண்மை இல்லாமல் இல்லை என்பதையும் சொல்லிவிடவேண்டும். ஆசிரமத்தின் வளர்ச்சி எத்தனை வேகமாக இருந்ததோ, அதே அளவுக்கு உள்ளே நடந்து கொண்டிருந்த கெட்ட காரியங்களும் அதிகமாகவே இருந்தன. சாமியாரின் முதன்மைத் தளபதிகள் கண்மூடித்தனமாகத் தங்கள் எதிரிகள் என்று நினைத்தவர்களைப் போட்டுத்தள்ளவும் அடித்துத் துரத்தவும் ஆரம்பித்திருந்தார்கள்.

பெரிய அளவில் விரிந்து பரந்துவிட்ட இயக்கத்தில், இதெல்லாம் தவிர்க்க முடியாதவை என்று



பொதுக்கூட்டத்திற்குத் திரண்ட மக்கள்...



வாக்கு எண்ணப்பட்ட இடத்தில் சோகமாக ஷோகோ...

ஷோகோ நினைத்தார். தவிரவும், எப்படியும் ஜப்பானே தன் கைவசம் வந்துவிடப்போகிற நிலையில், இதெல்லாம் என்ன ஜுஜுபி என்றும் தன்னை அவர் சமாதானப்படுத்திக்கொண்டார். இருக்கவே இருக்கிறது, 'டோக்கியோ ரிலிஜியஸ் கார்ப்பரேஷன், சட்டம். யார் என்ன செய்துவிட முடியும்? ஓர் ஆட்டம் ஆடிப்பார்த்துவிடுவது என்று அவர் முடிவு செய்தார்.

அப்போதுதான் அந்தத் தேர்தல் வந்தது. ஜப்பானிய தேசியத் தேர்தல். 1990-ம் ஆண்டுக்கான தேர்தல்.

ஜப்பான் தேர்தல் முறை சற்று வித்தியாசமானது. அங்கே இருபது வயதான ஜப்பானியர்கள் அனைவரும் ஓட்டளிக்கலாம். ஒவ்வொரு தேர்தலிலும் ஒவ்வொரு தொகுதியிலும் ஒவ்வொரு வாக்காளருக்கும் இரண்டு வாக்குச் சீட்டுகள் அளிக்கப்படும். ஒன்று, தம் தொகுதிக்கு யாரை அவர்கள் எம்.பி.யாகத் தேர்ந்தெடுக்க விரும்புகிறார்களோ, அவர்கள் பெயருக்கு முன்னால் முத்திரை குத்திச் செருகவேண்டிய சீட்டு. இன்னொன்று, எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தால் நல்லது என்று அவர்கள் நினைக்கிறார்களோ, அந்தக் கட்சியின் சின்னம் மட்டும் இடம்பெறும் தனிச்சீட்டு.

குழம்பாதீர். விஷயம் எளிமையானது. உதாரணத்துக்கு உங்கள் தொகுதியில் தி.மு.க, அ.தி.மு.க., தே.மு.தி.க., பா.ஜ.க. என்று நாலைந்து கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் நிற்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஏதோ ஒரு கட்சிக்கு வாக்களிக்கலாம் என்று தோன்றுகிறது. ஆனால், நிறுத்தப்பட்டிருக்கும் வேட்பாளர்கள் யாரும் சரியில்லை என்றும் தோன்றுகிறது. தோதாக சுயேச்சை ஒருவர் உத்தமோத்தமராக இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளவும். என்ன செய்வீர்கள்?

நம்மூரில் கண்டிப்பாக சுயேச்சைக்கு யாரும் வாக்களிப்பதில்லை அல்லவா? எத்தனை பிடிக்காத பிரகஸ்பதியாக இருந்தாலும், கட்சி பார்த்துத்தானே பெரும்பாலானோர் வாக்களிக்கிறார்கள்?

ஜப்பானில் சற்று வேறு மாதிரி. உங்களுக்குப் பிடித்த வேட்பாளருக்கு ஒரு வாக்களித்துவிட்டு, எந்தக் கட்சியை உங்களுக்குப் பிடிக்கிறதோ, அதற்கும் தனியாக வாக்களிக்க முடியும்.

மொத்தம் அங்கே 480 நாடாளுமன்றச் சீட்டுகள் இருக்கின்றன. அவற்றுள் 300 சீட்டுகள் வேட்பாளர்களின் வெற்றி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும். மிச்சமுள்ள 180 சீட்டுகளை அதிக வாக்குகள் பெறும் கட்சிகளுக்கு அளித்துவிடுவார்கள். இதனை Propotional Representation என்று சொல்லுவார்கள். வேட்பாளர்கள் உங்களுக்குப் பிடிக்காதுபோனால், உங்களுக்குப் பிடித்த கட்சியாவது சபையில் இருக்கும். கட்சி பிடிக்காதென்றால், நீங்கள் வாக்களித்த வேட்பாளராவது இருப்பார். எந்தக் காரணம் கொண்டும் வாக்களித்த மக்கள் ஏமாற்றத்துக்கு உள்ளாகக்கூடாது என்பதனாலேயே இப்படியொரு ஏற்பாடு.

ஆச்சா? மகான் ஷோகோ என்ன செய்தார் என்று பார்ப்போம். 1990 பொதுத்தேர்தலில் ஓம் இயக்கத்தின் சார்பில் சிலரைத் தேர்தலில் நிறுத்தலாம் என்று முடிவு செய்தார். ஆனால், ஒரு மத அமைப்பாக ஓம் ஷின்ரிக்கியோவால் தேர்தலில் நிற்க முடியாது. ஆகவே, 'ஓம் ஷின்ரி' என்கிற பெயரில் (என்றால், பேருண்மைக் கட்சி என்று பொருள்) ஒரு திடீர்க் கட்சியை உருவாக்கினார். மக்களுக்கு ஜனநாயக முறைப்படியும் சேவை செய்ய ஓம் இயக்கம் களமிறங்கியிருக்கிறது என்று சொல்லி, உடனடியாக அதற்கு தேர்தல் கமிஷன் அங்கீகாரமும் பெற்றுவிட்டார்கள்.

அடுத்தது என்ன? வேட்பாளர்கள் தேர்வு. தன்னையும் சேர்த்து ஓம் ஆசிரமத்தின் உயர்மட்ட

குண்டர்களில் இருபத்து நான்கு பேரைத் தேர்வு செய்து (ஆகமொத்தம் 25) இவர்கள் அனைவரும் எம்.பி தேர்தலில் நிற்கப்போகிறார்கள் என்று அறிவித்தது, ஓம் இயக்கத்தின் செய்தித் தொடர்புத் துறை.

'இதென்ன கூத்து' என்று சிலர் முணுமுணுத்தாலும், பலர் 'அட' என்று வியப்புற்றது உண்மை. ஷோகோ அசஹாரா 300 இடங்களில் ஆள் நிறுத்தினாலும், அத்தனையிலும் அவர்தானே ஜெயிப்பார்? அவரைக் காட்டிலும் ஜப்பானில் செல்வாக்கு உள்ளவர்கள் யார்? இதுதான் முக்கியமான விவாதப் பொருளானது.

'ஜப்பானில் என்ன? சோவியத் ரஷ்யா எலக்ஷனில்கூட அவர் ஆள் நிறுத்தலாம். பொலிட் பீரோ பிரச்னை பண்ணாதபட்சத்தில், ஷோகோ சுலபமாக ஜெயித்துவிடுவார்' என்று பேசினார்கள்.

உண்மையில் ஷோகோவே அப்படித்தான் நினைத்தார். என்ன பெரிய கஷ்டம்? ஜப்பானில் குறைந்தபட்சம் அவருக்கு பத்திலிருந்து முப்பது லட்சம் பேர் தீவிர பக்தர்கள் இருந்தார்கள். தவிரவும், அனுதாபிகள் என்று இன்னும் சிலபல லட்சங்கள். கட்சிக்காரர்களுக்குக் கூட அத்தனை செல்வாக்கு இருக்காது. மேலும் ஷோகோ ஒருமுறை புரண்டு படுத்தால் கூடச் செய்தியாக்கிவிடக் காத்திருக்கும் மீடியா, அவர் தேர்தலிலேயே நிற்கிறார் என்றால் சும்மா இருக்குமா?

பணம் இருக்கிறது. அதிகாரம் இருக்கிறது. செல்வாக்கு இருக்கிறது. அரசு மட்டத்தில், என்ன சொன்னாலும் அடிபணிந்து கேட்க எத்தனையோ பேர் தயாராக இருக்கிறார்கள். எப்படியும் 25 இடத்திலும் ஜெயித்துவிடலாம், அதன்பின் நாடாளுமன்றத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக வசப்படுத்தி, அடுத்த எலக்ஷனில் 300 இடங்களையும் கைப்பற்றிவிடலாம், அதற்கு அடுத்த எலக்ஷனில் நானூற்று எண்பதும் நம் வசம் என்று ஜோராக எழுபது எம்.எம்.மில் கனவு காணத் தொடங்கினார்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்.

உடனடியாகத் தேர்தல் கண்காணிப்புப் பிரிவு ஒன்று ஆசிரமத்தில் உருவாக்கப்பட்டது. தனியொரு அலுவலகம் அதற்காகத் திறக்கப்பட்டது. பிரம்புக்கூடைகளில் பணம் கொண்டுபோய் இறக்கப்பட்டது. தோரணங்களும் போஸ்டர்களும் ராவோடு ராவாக அடித்து தூள் கிளப்பின. கட்சி வேட்பாளர்களெல்லாம் திறந்த ஜீப்பில் கைகூப்பிச் சென்றால், ஓம் வேட்பாளர்கள் தங்க ரதங்களில் பவனி வந்தார்கள். அவர்கள் மூக்குத்தி கொடுத்தால், இவர்கள் மூக்கே கொடுத்தார்கள். அவர்கள் பொன் வைக்கும் இடத்தில் பூ வைத்தால் போதும் என்று நினைத்தால், இவர்கள் பூ வைக்கும் இடத்தில் பூங்காவனத்தையே வைத்தார்கள்.

செலவென்றால் செலவு, அப்படியொரு செலவு. ஆனால், படு சந்தோஷமாகச் செய்தார்கள். யார் வீட்டுப் பணம்? ஆத்துல போற தண்ணி. ஐயா குடி, அம்மா குடி என்று அள்ளிவிட்டார்கள். கோஷம் போடும் தொண்டர்களுக்கெல்லாம் தினசரி இரவானால் நட்சத்திர ஓட்டல்களிலிருந்து சரக்கும் சாப்பாடும் தூக்குவாளியில் வாங்கிவரப்பட்டு பரிமாறப்பட்டன. கட்சிக்காக உழைக்கும் அடிப்பொடிகளுக்கு ஏ.சி. ஓட்டல்களில் ரூம் போட்டுக் கொடுத்தார்கள். கொஞ்ச நஞ்சக் காசா? அடேங்கப்பா. நம்மாலெல்லாம் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாது.

ஷோகோ நிறுத்திய 24 வேட்பாளர்களும் எந்தெந்தத் தொகுதியில் போட்டியிட்டார்களோ, அந்தந்தத் தொகுதியில் இருந்த ஓம் பக்தர்களும் பணம் படைத்தவர்களும் தினசரி கட்சி நிதிக்காக மொய் எழுதிய சம்பவங்கள் அநேகம். ஒரு தொழிலதிபர், ஒரு குறிப்பிட்ட ஓம் வேட்பாளருக்காகத் தன்னுடைய ஒரு ஃபேக்டரியையே விற்று முழுக்காசையும் கொண்டுவந்து கொட்டினார்.

அவர்களுக்கே இப்படி என்றால், ஷோகோவுக்கு எப்படி இருக்கும்? அந்தத் தேர்தலை அவர்கள் தேர்தலாகவே நினைக்கவில்லை. மாறாக, ஜப்பானிய பக்தர்கள் அதுநாள் வரை சேர்த்துவைத்திருந்த அத்தனை பணத்தையும் கரைத்துக் கரியாக்கிவிட்டு, தேர்தல் முடிந்ததும்

புதிதாக நோட்டடித்து அளித்துக் கொள்ளலாம் என்றே தீர்மானித்துவிட்டார்கள்.

பொதுக்கூட்டங்கள், வானொலி, தொலைக்காட்சிப் பேச்சுகள், திறந்த ஜீப் உரைகள், கைப்பிரசுரங்கள், நாளிதழ் அறிக்கைகள் என்று ஷோகோ படு தீவிரமாக இருந்தார். ஏற்கெனவே அவர் பாப்புலர் ஆசாமி. தேர்தலிலும் நின்றுவிட்ட பிறகு புகழுக்குக் கேட்கவேண்டுமா?

ஒரு மதத்தலைவர் தேர்தலில் நிற்கிறார் என்பதே மாபெரும் செய்தி. சர்வதேச அளவில் விவாதித்தார்கள். ஒரு பக்கம் புகழ்மாலைகள். இன்னொரு பக்கம் அபாய எச்சரிக்கைகள். ஒரு வழியாகத் தேர்தல் தினம் வந்தது. முடிந்தது. வாக்குகள் எண்ணப்பட்டன.

அலை ஓய்ந்தது அப்போதுதான்.

யாரும் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை. அப்படியொரு ரிசல்ட்!

மதம், பக்தி சம்பந்தப்பட்ட விஷயத்தில் ஜப்பானியர்கள் கொஞ்சம் வீக்கே தவிர, அரசியலைத் தீர்மானிக்கும் விஷயத்தில் படுகெட்டி என்று அந்தத் தேர்தலில் நிரூபித்தார்கள்.

ஷோகோ உள்பட அவரது கட்சி சார்பில் நிறுத்தப்பட்ட 25 பேருக்கும் டெபாசிட் காலி!

அதிர்ந்துவிட்டார் ஷோகோ. அடக்கடவுளே! தனது ஆசிரமத்தில் இருக்கிற அத்தனை பேரும் வாக்களித்திருந்தால் கூட டெபாசிட் கிடைத்திருக்குமே! அப்படியென்றால்..?

அவர் நின்ற தொகுதியில் மொத்தம் ஐந்து லட்சம் வாக்காளர்கள் இருந்தார்கள். அதில் அவருக்குக் கிடைத்தது மொத்தமே 1700 ஓட்டுகள்தான். வெந்த புண்ணில் வெங்காய சட்னியை ஊற்றியதைப் போல ஷோகோ எதிர்ப்பாளர்கள் ராவோடு ராவாக ஒரு கணக்கெடுப்பு நடத்தினார்கள்.

அவரது தொகுதியில் வசிக்கும் மக்களில் ஓம் இயக்கத்து பக்தர்களின் மொத்த எண்ணிக்கை 18000. அவர்கள் கூட ஷோகோவுக்கு ஓட்டுப் போடவில்லை என்று ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டி வெறுப்பேற்றினார்கள்.

ஜப்பான் முழுக்க இதே பேச்சு. எங்கும் ஷோகோ. எதிலும் ஷோகோ. தோற்ற பிறகும் செய்தித் தாள்களில் அவரே நின்றார். எப்படித் தோற்றார்? ஏன் தோற்றார்? லட்சக்கணக்கான பக்தர்கள், வழிபடு ஜென்மங்கள் என்பதெல்லாம் பொய்யா? மாயைதானா? ஃப்ராடு சாமியாரை மக்கள் ஒதுக்கிவிட்டார்களா? மக்களுக்கு விழிப்புணர்வு வந்துவிட்டதா? இனிமேல் ஓம் ஆசிரமத்தில் ஈயும் கொசுவும்தான் மேயுமா?

அவ்வளவுதான். ஷோகோ அசஹாராவின் மூன்றாவது கண் அன்று திறந்துவிட்டது. 'நிர்மூலம். சகலத்தையும் நிர்மூலம் செய்வேன். இந்த அரசாங்கத்தை அழிப்பேன். ஆட்சியை ஒழிப்பேன். வாக்களிக்காத மக்களை சர்வநாசம் செய்வேன். இதுதான். இவ்வளவுதான். ஊழித்தீ பெருக்கெடுக்கப்போகிறது. என் சக்தி என்னவென்று பார்க்கத்தான் போகிறீர்கள். போர், போர், போர்! வந்தேவிட்டது யுத்தம். இதோ வருகிறேன் பார்!'

ஆங்காரமுடன் அவர் எழுந்து நின்றார். ஒரு மாபெரும் அழிவுக்காண்டத்தின் தோற்றுவாய், அந்தத் தேர்தல் முடிவில் இருந்ததை ஜப்பானியர்கள் அன்று அறிந்திருக்கவில்லை!